Cr. Misc. 19

# DEPOSITION OF WITNESSES

(Chapter XXIII Code of Civil Procedure)

IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, DHARMAPURI

Calendar Miscellaneous
Preliminary Registered
Sessions

Case No. **S.C. No.1 of 2025**

| | |
|---|---|
| Deposition of Witness for | : **PW5(LW7)** |
| Name | : திருமதி.சுகன்யா |
| Husband Name | : அசோக்குமார் |
| Village | : பிக்கனஅள்ளி |
| Taluk | : பாலக்கோடு |
| Calling | : |
| Age | : 32 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **19.09.2025.**

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**முதல் விசாரணை:**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். என்னை 14 வருடங்களுக்கு முன்பு பென்னாகரம் சமத்துவபுரத்தை சார்ந்த முனிராஜ் மகன் அசோக்குமாருக்கு திருமணம் செய்து கொடுத்தார்கள். எனக்கு மூன்று குழந்தைகள் உள்ளார்கள். என் கணவர் சென்டிரிங் வேலை செய்து வந்தார். என் மாமியார் கூலி வேலை செய்து வந்தார். நான் குழந்தைகளை பார்த்து கொண்டு வீட்டில்தான் இருந்தேன். என் வீட்டிற்கு முன்பு முனுசாமி மகன் ஆஜர் எதிரி சத்தியமூர்த்தி இருந்தார். சத்தியமூர்த்தி எங்கள் வீட்டிற்கு அடி அடிக்கு

வருவார். நல்ல படியாக பேசி பழகுவார். என் கணவர் சென்டிரிங் வேலைக்காக பெங்களூருக்கு சென்று விட்டு 15 நாட்களுக்கு ஒரு முறை வீட்டிற்கு வருவார். இப்படி இருக்கின்ற சூழ்நிலையில் எனக்கும் ஆஜர் எதிரிக்கும் தவறான உறவு ஏற்பட்டது. இதை பொறுத்து என்னுடைய கணவருக்கு தெரிய வந்ததால் எனக்கும் என் கணவருக்கும் குடும்பத்தினருக்கும் அடிக்கடி சண்டை வந்தது. அதேபோல எதிரி வீட்டிற்கு தெரிய வந்ததால் அவர்கள் வீட்டிலும் சத்தியமூர்த்திக்கும் அவர் பெற்றோருக்கும் சண்டை வந்தது. அந்த சண்டையில் என் கணவர் அசோக்குமார் எதிரியிடம் எதற்காக இது போன்ற தவறான செய்கைகள் செய்கிறாய் என்று கேட்டபோது உன்னை என்றைக்கிருந்தாலும் கொலை செய்துவிட்டு உன் மனைவியை நான் அடைந்தே தீருவேன் என்று சொல்லி வந்தார். என்னால் இப்படி பிரச்சனை ஏற்பட்டது என்று நான் புரிந்து கொண்டு இனிமேல் இந்த உறவு வேண்டாம் என்று நான் சத்தியமூர்த்தியிடம் பேசுவதை விட்டுவிட்டேன். போன வருடம் தீபாவளிக்கு 30.10.2024 அன்று நான் என் இரண்டு குழந்தைகளும் என்னுடைய அம்மா வீடான பிக்கன அள்ளிக்கு சென்றுவிட்டேன். இன்னொரு குழந்தையை என் மாமியார் கூட்டி கொண்டு எங்களுடைய உறவினர் ஊரான குணசனஅள்ளிக்கு சென்றுவிட்டார். அன்றைய தினமே என் கணவர் அசோக்குமார் நேராக பெங்களூரிலிருந்து பிக்கனஅள்ளிக்கு வந்துவிட்டார். தீபாவளி பண்டிகையை முன்னிட்டு 01.11.2024ம் தேதி எங்கள் ஊர் மாரியம்மன் கோவிலில் குழந்தைகளின் நடன நிகழ்ச்சி நடந்தது. அந்த நடன நிகழ்ச்சியில் என்னுடைய

குழந்தைகளும் கலந்து கொண்ட காரணத்தினால் நானும் என் கணவர், என் அம்மா, என் தம்பி ஆகியோர்கள் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருந்தோம். அப்போது ஆஜர் எதிரி சத்தியமூர்த்தி என் தொலைபேசியில் வந்து உன்னுடன் பேச வேண்டும் என்று அழைத்தார். அதற்கு நான் உன்னுடன் பேச வேண்டிய அவசியம் இல்லை என்று கூறிவிட்டு என் செல்போனை ஆப் செய்துவிட்டேன். சிறிது நேரம் கழித்து என் கணவருக்கு அழைப்பு வந்தது. யார் என்று நான் என் கணவரிடம் கேட்டபோது அவர் நான் பேசிட்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டார். அங்கிருந்த என் தம்பி வீட்டில் லைட் போடுவதற்காக சுமார் 08.00 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு சென்றார். அங்கு லைட் போட்டு பார்த்தபோது என்னுடைய கணவர் குத்துப்பட்டு விழுந்து கிடந்தார், அதை பார்த்து என் தம்பி சத்தம்போட நானும் என் குடும்பத்தினரும் ஓடி போய் பார்த்தோம். அங்கு என் தம்பியிடம் என்ன நடந்தது என்று கேட்டபோது ஆஜர் எதிரி சத்தியமூர்த்தி என் கணவரை குத்திவிட்டு ஓடிவிட்டதாக கூறினார். என் கணவர் இரத்த வெள்ளத்தில் இருந்ததை பார்த்து எனக்கு மயக்கம் ஏற்பட்டுவிட்டது. என்னை பாலக்கோடு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக என் உறவினர்கள் அழைத்து சென்றார்கள். சிகிச்சை கொடுத்து அன்று இரவு 02.00 மணிக்கு என்னை மீண்டும் வீட்டிற்கு அழைத்து வந்தார்கள். அப்போது நான் என் கணவருக்கு என்ன ஆனது என்று கேட்டபோது என் கணவரின் உடலை தருமபுரி அரசு மருத்துவமனைக்கு எடுத்து சென்றுவிட்டார்கள் என்று கூறினார்கள். அன்று காலை வரை எனக்கு மயக்கம்

தெளியவில்லை. காலை சுமார் 06.30 மணியளவில் மகேந்திரமங்கலம் போலீசார் என்னை காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று விசாரித்தார்கள். எனக்கு மயக்கம் முழுவதுமாக தெளியாததால் என்னால் பேச முடியாத சூழ்நிலையில் நான் இருந்தேன். அதனால் என்னுடைய மாமியார் புகார் மனு கொடுத்தார். மனுவின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து என் கணவரின் உடலை பிரேத பரிசோதனை செய்து அடக்கம் செய்வதற்காக பென்னாகரம் எடுத்து சென்றுவிட்டார்கள். 15 நாட்கள் கழித்து 16.11.2024ம் தேதி பாலக்கோடு நடுவர் நீதிமன்றத்திலிருந்து சம்மன் வந்தது. அதன் பேரில் பாலக்கோடு நீதிமன்றத்திற்கு சென்று நடுவரிடம் நடந்ததை வாக்குமூலமாக கொடுத்தேன். நான் கொடுத்த வாக்குமூலம் **அ.சா.ஆ.3**. இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**</u>

சம்பவம் நடந்தன்று எதிரி எனக்கு போன் செய்த விவரத்தை போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு என்னுடன் என் அம்மா ராஜேஸ்வரி, என் தம்பி சுந்தர், என் அண்ணி பரிமளா, என் அண்ணன் சுதாகர் ஆகியோர்கள் வந்தார்கள். காவல் நிலையத்திலிருந்து வந்து என்னை அழைத்து சென்றார்கள் என்றால் சரிதான். என் கணவர் இறந்துவிட்டார், அதனால் விசாரணைக்காக அழைத்து வரும்படி சொன்னார்கள். அரை மணி நேரம் கழித்து காவல் நிலையத்திற்கு சென்றோம். நேரம் சரியாக ஞாபகமில்லை. நான் காவல் நிலையத்திற்கு சென்றபோது அங்கு

என் மாமியார் இருந்தார். என் ஊருக்கும் காவல் நிலையத்திற்கும் இடையே சுமார் 15 கிமீ தூரம் இருக்கும். என் தம்பி மயக்க நிலையில் இல்லை என்றால் சரிதான். போலீசார் என் தம்பியை விசாரித்தார்களா என்று எனக்கு தெரியாது. என் தம்பி என் மாமியாரிடம் எதிரியை பார்த்ததாகவும் கத்தியை எடுத்து வந்ததாகவும் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் மயக்க நிலையில் இருந்ததால் என்னிடம் எந்த புகாரும் வாங்கவில்லை. எனக்கு எதிரியுடன் கள்ள உறவு இருந்தது என்று போலீசார் சொல்லி கொடுத்ததன் பேரில் இன்று இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என் கணவரின் இறப்பு சம்மந்தப்பட்ட சடங்குகளுக்கு நானும் என் குடும்பத்தாரும் செல்லவில்லை என்றால் சரிதான். 2ம் தேதி நல்ல நிலையில்தான் நான் இருந்தேன். 5ம் தேதி வரையில் காவல் அதிகாரிகள் என்னிடம் எந்த விசாரணையும் செய்யவில்லை. யாரோ கொலை செய்துவிட்டு என் கணவர் இறந்துவிட்டார். எதிரியுடன் சேர்த்து இந்த வழக்கில் என்னையும் சேர்த்து விடுவோம் என்று சொன்னதால் போலீசார் கேட்டு கொண்டதற்கிணங்க அவர்களுக்கு ஏதுவாக நான் சாட்சியம் கூறியுள்ளேன் என்று சொல்வது சரியல்ல. என் குழந்தைகள் தற்போது என் மாமியாரிடம் உள்ளார்கள். என் கணவரின் ஈம சடங்குகளுக்கு நாங்களே செல்லவில்லை. பிரச்சனை வரும் என்பதால் நான் செல்லவில்லை. மேற்சொன்ன விவரத்தை நான் பாலக்கோடு நடுவர் நீதிமன்றத்தில் கொடுத்த வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். என் மாமியார் வரக்கூடாது என்று சொன்னதால் நான் செல்லவில்லை

என்று வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். குழந்தைகள் சம்மந்தமாக எந்த நடவடிக்கையும் நான் இதுவரை எடுக்கவில்லை என்றால் சரிதான். எதிரி கொலை செய்தார் என்பதை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். பொதுவாக தீபாவளி சமயத்தில் மாலை 06.30 மணிக்கு நோம்பு முடிந்துவிட்டது. அதை தொடர்ந்து நடன நிகழ்ச்சி நடந்தது. நடன நிகழ்ச்சி அனைவரும் பார்ப்பது வழக்கம் என்றால் சரிதான். வெளியூரில் வேலை செய்பவர்கள் பண்டிகை நாட்களில் ஊருக்கு வருவார்கள் என்றால் சரிதான். அதேபோல தான் என் கணவரும் பெங்களூரில் இருந்து வந்தார். என் தம்பிக்கும் என் கணவருக்கும் நல்ல உறவு முறை இருந்தது. என் கணவர் இறந்துவிட்டதை முதலில் பார்த்த என் தம்பி எதிரியை பிடிக்க எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றால் சரிதான். பாலக்கோட்டிலிருந்து ஓசூர் செல்லும் பாதையில் இடது புறமாக கோவில் உள்ளது. வலது புறமாக வீடுகள் உள்ளன. ஊருக்குள் வரும்போது மட்டும் ஒரு வேகத்தடை உள்ளது. அடுத்த வேகத்தடை இல்லை. வலது புறத்தில் உள்ளே சென்றால் எங்கள் வீட்டை தள்ளி சுமாராக 10 வீடுகள் இருக்கும். அதை தாண்டி மாந்தோப்பு உள்ளது. எங்கள் வீட்டை தாண்டி எந்த வீடும் இல்லை, காடுகளாக உள்ளது. என் கணவர் எனக்கு தெரிந்து குடிப்பது இல்லை. என் தம்பிக்கு குடிபழக்கம் இல்லை. என் கணவருக்கும் என் தம்பிக்கும் குடிபழக்கம் உண்டு என்றும் சம்பவ நடந்தன்றும் அவர்கள் குடித்திருந்தார்கள் என்றும் ஊருக்குள் சின்ன சின்ன சண்டைகள் நடந்தபோது என் கணவர் தனியாக சென்றுவிட்டார் என்றும் என் தம்பி வேறு பக்கம்

சென்றுவிட்டார் என்றும் சொன்னால் சரியல்ல. எங்கள் வீடு உள்ள வழிப்பாதை 2–3 அடிதான் இருக்கும். சம்பவம் நடந்த இடத்தில் எதிரியை என் தம்பி பார்த்திருந்தால் அவரை பிடிக்க முயற்சி செய்திருப்பார் என்றும் என் தம்பி சத்தியமூர்த்தியை பார்க்க வாய்ப்பில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் எனக்கும் உள்ள பழக்கம் பொறுத்தும் மற்றும் எங்கள் இருவருடைய எண்கள் பற்றி இதற்கு முன்பு கொடுத்த வாக்குமூல ஆவணங்களில் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். தற்போது எதிரியுடன் எனக்கு எவ்வித பழக்கமும் இல்லை. கடைசியாக எதிரியிடம் சம்பவம் நடந்த அன்று பேசினேன். நான் சொல்வது தவறு என்றும் என்னை இந்த வழக்கில் சேர்ப்பதில் இருந்து தப்பித்து கொள்வதற்காக ஆஜர் எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை– இல்லை

Taken down by me in the presence of Accused. Readover to the witness and admitted by the witness as true and correct and signed in my presence on 19.09.2025.

THIRUMAGAL C Digitally signed by THIRUMAGAL C Date: 2025.09.19 17:15:11 +0530
Principal Sessions Judge,
Dharmapuri.